# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2441/15 - 2025 ජූනි මස 18 වැනි බදාදා - 2025.06.18

*2441/15 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 18 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்***

*25 அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1) (ஆ) என்னும் பிரிவின் கீழான கட்டளை .*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கங்கள் சட்டத்தின் 25 அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1)(ஆ) என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர் ஹரிணி அமரசூரிய ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும் பட்டத்தை அளிக்கின்ற நிறுவகமொன்றாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட PV 17745 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்டதும் மிலேனியம் டிரைவ் , IT பார்க், மாலபே 10115 இல் அமைந்துள்ளதுமான சினெக் கெம்பஸ் (பிறைவேட் லிமிடெட்) தொடர்பில், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70 இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதும், 2024, செத்தெம்பர் 25 ஆந் திகதிய 2403/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான II ஆம் அட்டவணையை அதற்கான நிரல் I இல் காணப்படும் " முன்பிள்ளைப் பருவக் கல்வியில் கல்வியியல் இளமாணி சிறப்பு" என்னும் பதிவையும் நிரல் II இலுள்ள அதன் நேரொத்த பதிவையும் உடனடுத்து, அதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைவாக இதற்கான அட்டவணை II இன் முறையே நிரல் I இன் கீழும் நிரல் II இன் கீழும் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்.*

**அட்டவணை I**

நிபந்தனைகள்

1. சினெக் கெம்பஸ் ( பிறைவேட்) லிமிட்டெட், ஆனது குறைந்தபட்சம் 120 திறமை மதிப்பீடுகளுடன் வலையமைப்பு பாதுகாப்பு மற்றும் தடயவியலில் கணினி விஞ்ஞானத்தில் விஞ்ஞான இளமாணி சிறப்பு ( இலங்கை தகைமை கட்டமைப்பு மட்டம் 6) தொடர்பில் இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித் திட்டத்துக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும்போது, பின்வரும் குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்:


1A - PG 7155— 284 (2025/06)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(அ) இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த ( உயர்தர) பரீட்சையில் பௌதிக விஞ்ஞான பாடத்துறையில் அல்லது பொறியியல் தொழிநுட்பவியல் பாடத்துறையில் ஒரே மற்றும் அதே அமர்வில் மூன்று (3) சாதாரண சித்திகள் (S) அல்லது அதற்குச் சமமான தகைமைகள்: அல்லது,

(ஆ) இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த ( உயர்தர) பரீட்சையில் ஏதேனும் பாடத்துறையில் ஒரே மற்றும் அதே அமர்வில் மூன்று (3) சாதாரண சித்திகள் (S) அல்லது அதற்குச் சமமான தகைமைகள் மற்றும் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த ( சாதாரண தரத்தில்) கணித பாடத்தில் திறமைச் சித்தி (C) அல்லது அதற்குச் சமமான தகைமைகள் அத்துடன் குறித்துரைக்கப்பட்ட அதிகார சபையினால் அங்கீகரிக்கப்பட்ட இணைப்பு நிகழ்ச்சித் திட்டமொன்றுடனான வெற்றிகரமான பூரணப்படுத்துகை; அல்லது,

(இ) இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த ( உயர்தர) பரீட்சையில் ஏதேனும் பாடத்துறையில் ஏதேனும் தடவையில் ஒரே மற்றும் அதே அமர்வில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் சாதாரண சித்தியுடன் (S) மூன்று (3) சாதாரண சித்திகள் (S) அல்லது அதற்குச் சமமான தகைமைகள் அத்துடன் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த ( சாதாரண தரத்தில்) கணித பாடத்தில் திறமைச் சித்தி (C) அல்லது அதற்குச் சமமான தகைமைகள்.

2. இந் நிறுவகமானது, பட்டமளிக்கும் நிலையை வழங்கிய திகதியிலிருந்து இரண்டு வருடங்களினுள் தேவையான ஆய்வு திறனை நிறைவு செய்தலுக்கு அமையவிருத்தல் வேண்டும்.

3. சினெக் கெம்பஸ் ( பிறைவேட்) லிமிட்டெட் ஆனது, குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்படும் ஐந்து (5) ஆண்டு மீள் மீளாய்வுக்கு அமைய இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்தை வழங்குவதற்கு ஏற்றங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

**அட்டவணை II**

| *நிரல் I*<br>*பட்டம்* | *நிரல் II*<br>*பட்டத்துக்கான சுருக்கீடு* |
|---|---|
| வலயமைப்பு பாதுகாப்பு மற்றும் தடயவியலில் கணினி விஞ்ஞானத்தில் விஞ்ஞான இளமாணி சிறப்பு | பீஎஸ்சீ சிறப்பு ( வலயமைப்பு பாதுகாப்பு மற்றும் தடயவியல்) |

கலாநிதி **ஹரிணி அமரசூரிய**,
கல்வி, உயர்கல்வி, மற்றும்
தொழிற்கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2025, யூன் மாதம் 12 ஆந் திகதி.

EOG 06 - 0131